

# நீங்களும் பச்சை மையில் கையெழுத்து போடலாம்..

## (அதிகாரிகள் குடுமி உங்கள் கையில் – பாகம் 11)






டாக்டர்.**நல்வினை.விஸ்வராஜ்**, எம்.ஏ.பி.எல்.,

**க. சதீஸ்குமார்**, பி.ஏ.பி.எல்.,

திருநின்றவூர் **கு. பாஸ்கர்**, பி.ஏ.எல்.எல்.பி.,



வெளியீடு

**பத்து ரூபாய் இயக்கம்**

தகவல் உரிமை சட்ட ஆர்வலர்கள் அமைப்பு

சாமானியருக்கான நீதி

94456 75801, 89400 06645, 96297 60466


நன்கொடை வழங்க

Ms Ten Rupee Movement

G Pay

94456 75801

# பத்து ரூபாய் இயக்கம்

## தகவல் உரிமை சட்ட ஆர்வலர்கள் அமைப்பு

## நீங்களும் பச்சை மையில் கையெழுத்து போடலாம் !!!

பச்சை மை பேனாவில் கையெழுத்து போடுவது என்பது அதிகாரத்தின் வெளிப்பாடாகவும் உயர்நிலை அதிகாரிகளின் அதிகாரத்தின் அடையாளமாகவும் பொது மக்களால் பார்க்கப்படுகின்றது. பச்சை மையில் கையொப்பத்தை காசோலைகளில் இடும் அதிகாரத்தை பெற வேண்டும் என்றே பலர் ஊராட்சி மன்ற தலைவர் பதவியை அடைய கடுமையாக போராடுகின்றார்கள். என் மகனை/மகளை, பச்சை மையில் கையெழுத்துப் போடும் அதிகாரியாக்கி பார்க்க வேண்டும் என்று கனவு கானும் பெற்றோர்கள் நம் தேசத்தில் அதிகம். கவர்ச்சி கன்னியை போல பச்சை மை மீது நம் தேசத்தில் ஒரு கவர்ச்சி உள்ளது.

பச்சை மை கையெழுத்து இடுவதற்கு அதிகாரம் யார் யாருக்கு உள்ளது என்பது தொடர்பான சட்ட விவாத பட்டி மன்றம் சமூக ஊடகங்களில் அடிக்கடி நடக்கின்றது. விடை தெரியாத கேள்வியாக பச்சை மை சட்டப் பிரச்சனை நீண்ட காலமாக விவாதப் பொருளாக இருந்து வருகின்றது.

பச்சை மை கையெழுத்து பற்றிய சட்டங்களை அறிந்துக் கொள்வதற்கு முயற்சி எடுத்து தேடுபவர்களுக்கு பாராளுமன்றம் சட்ட மன்றம் இயற்றிய சட்டங்கள் எதும் கிடைப்பது இல்லை. ஏனென்றால் அப்படி இயற்றப்பட்ட சட்டங்கள் ஏதுவும் இந்தியாவில் தமிழகத்தில் இல்லை.

தமிழகத்தை பொறுத்த வரையில் அரசு ஊழியர்களின் அடிப்படை நடைமுறை சட்ட புத்தகமான தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் மற்றும் தமிழ்நாடு தலைமை செயலக அலுவலக நடைமுறை நூல் ஆகியவற்றில் அரசு ஊழியர்கள் அரசு அலுவலகத்தில் பச்சை மையை பயன்படுத்துவது தொர்பான வழிக்காட்டுதல்களை மிகத்தெளிவாக சொல்லியுள்ளது. இவற்றில் மாற்றங்கள் திருத்தங்கள் செய்வது தொடர்பான பல்வேறு அரசு கடிதங்கள், அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் சட்டங்களுக்கு இணையானவை.

## பச்சை மை பயன்படுத்த அதிகாரம் உள்ள அலுவர்கள்

தற்சமயம் தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளின் படி பச்சை மை பயன்படுத்த அதிகாரம் உள்ள தமிழக அரசு அலுவலர்கள் பின்வருமாறு

1. சான்று செய்ய அதிகாரம் உள்ள அலுவலர்கள் சான்று செய்யும் போது பச்சை மையில் கையெழுத்திட வேண்டும்.
2. தொகுதி அ & ஆ (Group A& B) அலுவலர்கள் கோப்புகளில் குறிப்புகள் எழுத பச்சை மையை பயன்படுத்தலாம்.
3. தலைமை செயலகத்தில் உள்ள பணியாளர் சீர்திருத்த துறை மற்றும் சட்ட துறைக்கு மற்ற துறைகளில் இருந்து வரும் வரைவுகள், உத்திரவுகள், அறிவிப்புகள், சட்ட விதிகள் போன்ற வரைவுகளில் பச்சை மையில் திருத்தங்கள் செய்யலாம்.
4. இவர்கள் தவிர மற்ற அரசு ஊழியர்கள் பச்சை மையை பயன்படுத்த தடை செய்யப்பட்டு உள்ளது.
5. மத்திய அரசு ஊழியர்களை பொறுத்த வரை தொகுதி அ, ஆ Group ‘A’ Group ‘B’ அலுவலர்கள் பச்சை மையை பயன்படுத்த அதிகாரத்தை பெற்றுள்ளார்கள்.
6. தமிழ்நாட்டுக்கு வெளியே கேரளா தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் தமிழகம் போன்ற சட்ட நடைமுறைகளே உள்ளது.

## சாமான்ய மனிதன் பச்சை மையை பயன்படுத்தலாம்

அரசு ஊழியராக இல்லாத சாமான்ய மனிதன் பச்சை மையை பயன்படுத்துவதை தடை செய்து எவ்வித சட்ட பூர்வ அறிவிப்புகளோ அரசின் உத்தரவோ அரசாணையோ சட்டமோ சட்ட விதிகளோ நீதிமன்ற தீர்ப்புகளோ இல்லை. தற்சமயம் வரை ஒன்றிய. மாநில அரசுகள் இந்த விசயம் தொடர்பாக அரசு ஊழியர்கள் அல்லாத இந்திய குடிமக்களை கட்டுப்படுத்தும் வகையில் எவ்விதமான சட்ட ஏற்பாடுகளையும் செய்யவில்லை.

அரசு ஊழியர்கள் அரசு அலுவலக கோப்புகளில் எந்த வகையான பேனாவை பயன்படுத்த வேண்டும் என்ன வண்ணத்தில் பேனா மையை பயன்படுத்த வேண்டும் என்று மிகத் தெளிவாக வழிக்காட்டியுள்ள சட்ட விதிகள் அரசு ஊழியராக இல்லாத. அரசிடம் சம்பளம் வாங்காத இந்திய குடிமக்கள் எந்த வகையான பேனாவை பயன்படுத்த வேண்டும் என்ன வண்ணத்தில் பேனா மையை பயன்படுத்த வேண்டும் என்று எவ்வித வழிக்காட்டுதல்களையும் சொல்லாததால் சட்டம் அமைதியாக இருப்பதால் சுதந்திரமான இந்திய குடிமகன் தன் சுய விருப்பத்தின் பேரில் முடிவெடுக்கும் அதிகாரத்தை சட்டம் வழங்கியுள்ளது.

ஒன்றிய, மாநில அரசுகள் இன்று வரை இந்தியக் குடிமக்கள் அரிசி உணவை சாப்பிட அனுமதியளித்தோ, அரிசி உணவை சாப்பிட தடை செய்தோ, இந்த வழிமுறையில் சமைத்து தான் அரிசியை சாப்பிட வேண்டும் என்று சட்டம் ஏதும் போடவில்லை, நாம் அரிசியை சோறாக்கி பிரியாணியாக்கி மாவாக்கி, இட்லியாக்கி, தோசையாக்கி நாம் விரும்பிய வகையில் சாப்பிடுகின்றோம். இது போலவே ஆட்டுக்கறி சாப்பிடுவது பற்றி சட்டம் அமைதியாக இருப்பதால் ஆட்டுக்கறியை சாப்பிடுகின்றோம். ஆனால் மான் கறி சாப்பிட்டால் சிறை தண்டனை என்று தடைசெய்யப்பட்டுள்ளதால் மான் கறி சாப்பிட மாட்டோம். அதே போல தான் சட்டம் ஏதும் சொல்லாதால், சட்டம் அமைதியாக இருப்பதால், அரசு ஊழியர்கள் அல்லாத இந்திய குடிமக்கள் தங்கள் விரும்பிய வண்ணத்தில் மையினை பயன்படுத்த சட்ட சிக்கல் ஏதும் இல்லை.

## பச்சை மையில் கைநாட்டு வைக்கலாமா

கையெழுத்து போட தெரியாத படிப்பறிவு இல்லாத பாமர மனிதன் கைநாட்டு செய்வதை, கைரேகை வைப்பதை நடைமுறையில் பார்க்கின்றோம். கைநாட்டினை கத்தொரிபூ வண்ண மையில் வழக்கமாகவும் சார்பதிவாளர் அலுவலகம் போன்ற அவணப் பதிவு நேர்வுகளில் கருப்பு நிறத்தில் கைரேகை வைக்கின்றோம். சட்டத்தில் எங்கும் பச்சை மையில் கைநாட்டு வைக்க தடை இல்லை.

## பச்சை மை தொடர்பான சட்டங்கள்

பாராளுமன்றம் மற்றும் சட்ட மன்றம் இயற்றிய சட்டங்கள் எதும் இந்தியாவில் தமிழ்நாட்டில் இல்லை. ஆனால் தமிழ்நாட்டில் பின்வரும் விதிகள் அரசாணைகள் உள்ளன.

## தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் பாரா 14A

<u>தமிழ்நாடு தலைமை செயலக அலுவலக நடைமுறை நூல் அத்தியாயம் - XXII பாரா – 557</u>

அரசாணை எண் : 151 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 21.10.2010
அரசாணை எண் : 139 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 18.07.2007
அரசாணை எண் : 38/2011 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 25.03.2011
அரசாணை எண் : 167/2012 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 26.11.2012
அரசாணை எண் : 189/2007 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 18.07.2007
அரசாணை எண் : 253 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 24.05.1990
அரசாணை எண் : 71 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் : 05.02.1996
முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையாளர் கடிதம் எண் 1(1)/51869 / 2012 / நாள் : 01.11.2012

## இந்தியா முழுவதும் உள்ள சட்டங்கள்

கேரளாவை தவிர இந்தியா முழுவதும் தமிழ்நாட்டில் உள்ளது போன்றே பச்சை மை பயன்பாடு தொடர்பான சட்ட நடைமுறைகளோ உள்ளது.

## முக்கிய சட்ட அம்சங்கள்

தற்சமயம் நடைமுறையில் உள்ள சட்ட விதிகள் படி பேனா பயன்படுத்துவது தொடர்பான முக்கிய சட்ட அம்சங்களை பின்வருமாறு

1. அரசு அலுவலகங்களில் பின்வரும் பேனாக்களை மட்டுமே பயன்படுத்தலாம்.

(அ) மை ஊற்று எழுது கோல் (Fountain Pen) (Ink Pen)
(ஆ) பந்து முனை எழுதுகோல் (Ball Point Pen)
(இ) கூழ்ம மை எழுது கோல் (Gel Pen)

2. அரசு அலுவலகங்களில் ஆவணங்கள் கோப்புகள் தாள்கள் எழுதுவதற்கு பின்வரும் வண்ண மைகளை (ink) மட்டுமே அலுவலக ஊழியர்கள் பயன்படுத்த வேண்டும்.

(அ) நீடித்த நீலம் (Permanent Blue),

(ஆ) கருநீலம் (Blue Black) அல்லது

(இ) கருப்பு வண்ண (Black).

3. தரமான நிறுவனங்களின் மையை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

4. திருந்தங்கள் செய்யும் அதிகாரம் படைத்த அலுவலர்கள் சிவப்பு மையில் (Red Ink) திருத்தங்கள் செய்யலாம்.

5. உத்திரவிடும் அதிகாரம் கொண்ட அலுவலர்கள் (தொகுதி 'அ' தொகுதி 'ஆ') பச்சை மையில் (green Ink) திருத்தங்கள் செய்யலாம். கோப்புகளில் பச்சை மையில் குறிப்புகள் எழுதலாம்.

6. வரைவு, உத்திரவுகள், அறிவிப்புகள், சட்ட விதிகள் போன்ற வரைவுகளில் பணியாளர் சீர்திருத்த துறை, சட்ட துறை சிவப்பு மை மற்றும் பச்சை மையில் திருத்தங்கள் செய்யலாம்.

7. ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றில் உண்மை நகல் என்று சான்று செய்ய (permitted to attest true copies of certificate) அனுமதியுள்ள அதிகாரமுள்ள அலுவலர்கள் சான்று செய்ய பச்சை மையினை பயன்படுத்தலாம்.

8. சான்று செய்ய அதிகாரம் பெற்றுள்ள அலுவலர்கள் சான்று செய்ய பச்சை மையை பயன்படுத்தலாம்.

## அரசாணை எண் 151-ன் சிறப்பு அம்சங்கள்

1. அரசு அலுவலகங்களில் நிலைத்த நீலம் (Permanent Blue) கரு நீலம் (Blue Black) அல்லது கருப்பு வண்ண (Black) மையினை மட்டுமே அரசு ஆவணங்களில் எழுதுவதற்கு பயன்படுத்தலாம் எனவும்.

2. இவைகளைத் தவிர பிற வண்ண மையின் பயன்பாட்டினைத் தடை செய்தும்.

3. வரைவு ஆணைகள் / அறிவிக்கைகள் / விதிகள் போன்றவற்றில் திருத்தம் செய்யும் போது பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை பச்சை நிற (Green) மையினையும் சட்டத் துறை நிர்வாக சிவப்பு நிற (Red) மையினையும் பயன்படுத்தலாம் எனவும்.

4. அரசு அலுவலங்களில் மை ஊற்று எழுதுகோலுடன் (Fountain Pen ) பந்துமுனை ( Ball Point) கூழ்ம மை (Gel) எழுதுகோலையும் பயன்படுத்த அனுமதிக்கலாம் எனவும்.

5. அரசு ஆணை (நிலை) எண் 139 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எஸ்)த் துறை நாள் 18.07.2007ன் படி சான்றொப்பம் இடுவதற்கு அனுமதிக்கப்பட்ட அலுவலர்கள் பச்சை நிற மையினை (Green Ink) சான்றொப்பம் இடுவதற்கு பயன்படுத்தலாம் எனவும்.

6. தொகுதி 'அ' அலுவலர்கள் மட்டும் அரசு கோப்புகளில் சிறு குறிப்புகள் எழுத பச்சை நிற (Green Ink) மையினை பயன்படுத்தலாம் எனவும் அரசு ஆணையில் சொல்லப்பட்டுள்ளது. (அரசாணை எண் : 151 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்)த் துறை நாள் : 21.10.2010)

## அரசாணை எண் 38-ன் சிறப்பு அம்சங்கள்

தமிழ்நாடு தலைமை செயலக அலுவலக நடைமுறை நூல் அத்தியாயம் – XXII பாரா – 557 –ல் மேலேயுள்ள அரசாணை எண் 151 படி செய்ய வேண்டிய திருத்தங்களை பற்றி இந்த அரசாணை வழிக்காட்யுள்ளது. அதன்படி திருத்தங்கள் செய்யபட்டுள்ளது.

## அரசாணை எண் 167-ன் சிறப்பு அம்சங்கள்

தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் பாரா 14 –A –ல் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் பற்றி அரசு கடிதம் முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையாளர் கடிதம் எண் 1( 1 )/ 51869/2012 நாள் : 01.11.2012–ல் தெரிவிக்கப்பட்ட விசயங்கள் அடிப்படையில் அரசாணை எண் : 151 படி செய்ய வேண்டிய திருத்தங்களை பற்றி அரசாணை எண் 167 தெளிவாக சொல்லி உள்ளது. அதன்படி திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.

## அரசாணை எண் 189-ன் சிறப்பு அம்சங்கள்

அரசு அலுவலர்களில் யார் யார் தொகுதி 'அ' தொகுதி 'ஆ' **(Group I & II)** அலுவலர்கள் என்ற விபரத்தை இந்த அரசாணை விளக்குகின்றது.

## அரசாணை எண் 253-ன் சிறப்பு அம்சங்கள் G.O. No. 253

அரசு அலுவலகங்களில் யார் யார் தொகுதி 'அ' தொகுதி 'ஆ' அலுவலர்கள் என்ற விபரத்தை சம்பளம் அடிப்படையில் வகைப்படுத்தி இந்த அரசாணை விளக்குகின்றது. (அரசாணை எண் : 253 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்)த் துறை நாள் : 24.05.1990)

## அரசாணை எண் 71-ன் சிறப்பு அம்சங்கள் G.O. No. 71

சான்று செய்ய அதிகாரம் அரசு அலுவலர்களில் தொகுதி அ தொகுதி ஆ அலுவலர்களுக்கு வழங்கியதன் விளைவாக செய்யப்பட்டுள்ள ஊதிய விகித மாற்றங்கள் பற்றி இந்த அரசாணை தெளிவு படுத்துகின்றது. அரசாணை எண் 71 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்)த் துறை நாள் : 05.02.1996)

## ஊராட்சி மன்ற தலைவர் பச்சை மையில் கையொப்பம் செய்யலாமா?

ஊராட்சி மன்ற தலைவரை வாக்காளர்கள் ஊராட்சி மன்ற தலைவராக தேர்ந்தெடுத்தாலும் அவர் அந்த ஊராட்சியின் செயல் அலுவலராகவும் பதவி வகிக்கின்றார் ஊராட்சி செயல் அலுவலர் என்ற முறையில் மதிப்பூதியம் பணப்படிகள் பெறுவதால் ஊராட்சி மன்ற தலைவர் பச்சை மையில் கையொப்பம் செய்ய சட்டத்தில் இடம் இல்லை, எனவே ஊராட்சி தலைவர் பச்சை மையில் ஊராட்சி ஆவணங்களில் கையொப்பம் செய்தால் அவர் சட்டத்தை மீறிய குற்ற செயல் புரிந்தவராகின்றார். தொடர்ந்து குற்றமிழைத்தால் ஊராட்சிகள் சட்ட பிரிவு 205ன் படி ஊராட்சி தலைவர் பதவியை இழக்கும் ஆபத்தும் உள்ளது.

## மாநகராட்சி மேயர் (Meyar) மாமன்ற உறுப்பினர்கள் ( Councilors) பச்சை மையில் கையோப்பம் செய்யலாமா?

## நகராட்சி தலைவர் (Municipal Chairman) நகர் மன்ற உறுப்பினர்கள் (MC) பச்சை மையில் கையோப்பம் செய்யலாமா?

## பேரூராட்சி தலைவர் (Town Panchayath Chairman) பேரூராட்சி உறுப்பினர்கள் (Town Panchayath Councilors) பச்சை மையில் கையோப்பம் செய்யலாமா?

மாநகராட்சி மேயர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற தலைவர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி தலைவர், பேரூராட்சி உறுப்பினர்கள் அலுவலக கோப்புகளில் பச்சை மையில் கையொப்பம் செய்ய சட்ட அதிகாரம் இல்லை.

அரசு ஊழியாராக இல்லாத, அரசிடமிருந்து சம்பளம் வாங்காத சாமான்ய மனிதன் கையெழுத்து போடுவதற்கு பச்சை மையை பயன்படுத்தலாம். பச்சை மையில் கையெழுத்து போடலாம். பச்சை மையில் கைரேகையை வைக்கலாம். சட்டம் உங்களை தடுக்கவில்லை!


**பத்து ரூபாய் இயக்கம்**

**தகவல் உரிமை சட்ட ஆர்வலர்கள் அமைப்பு**

எண் 7, பழைய பேருந்து நிலையம். இராசிபுரம் - 637 408.

போன் : 94456 75801, 89400 06645, 96297 60466.

---

**நல்வினை. விஸ்வராஜ்.** எம்.ஏ., பி.எல்.,

**க. சதீஸ்குமார்,** பி.ஏ., பி.எல்.,

**திருநின்றவூர். கு. பாஸ்கர்,** பி.ஏ., எல்.எல்.பி,



# நீங்களும் பச்சை மையில் கையெழுத்து போடலாம்..

## (அதிகாரிகள் குடுமி உங்கள் கையில் – பாகம் 11)






டாக்டர்.**நல்வினை.விஸ்வராஜ்**, எம்.ஏ.பி.எல்.,
**க. சதீஸ்குமார்**, பி.ஏ.பி.எல்.,
திருநின்றவூர் **கு. பாஸ்கர்**, பி.ஏ.எல்.எல்.பி.,



வெளியீடு

**பத்து ரூபாய் இயக்கம்**
தகவல் உரிமை சட்ட ஆர்வலர்கள் அமைப்பு

94456 75801, 89400 06645, 96297 60466


நன்கொடை வழங்க

Ms Ten Rupee Movement

G Pay
94456 75801